بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/03/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துகளின் ஒளியில் சூரா ஜுமுஆவின் ஆரம்ப வசனங்களுக்கான விளக்கவுரையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தின் அடையாளங்களும்**

பாக்கிஸ்தான், புர்கினாஃபாஸோ மற்றும் பங்களாதேஷின் அஹ்மதிகளுக்காக துஆக்கள் செய்யுமாறு தொடர்ச்சியான வலியுறுத்தல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

هُوَ الَّذِىۡ بَعَثَ فِى الۡاُمِّيّٖنَ رَسُوۡلًا مِّنۡهُمۡ يَتۡلُوۡا عَلَيۡهِمۡ اٰيٰتِهٖ وَيُزَكِّيۡهِمۡ وَيُعَلِّمُهُمُ الۡكِتٰبَ وَالۡحِكۡمَةَ ۚ وَاِنۡ كَانُوۡا مِنۡ قَبۡلُ لَفِىۡ ضَلٰلٍ مُّبِيۡنٍۙ ۝ وَّاٰخَرِيۡنَ مِنۡهُمۡ لَمَّا يَلۡحَقُوۡا بِهِمۡ‌ ؕ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ۝

இந்த வசனங்களின் பொருள்: **"**அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். மேலும், இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான்.**"**

23 மார்ச் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் **மஸீஹ் மவ்வூத் தினம்** என்ற பெயரில் அறியப்படுகின்றது. நாம் பாக்கியசாலிகளாவோம். அல்லாஹுத்தஆலா தனது வாக்குறுதி மற்றும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப காலத்தின் இமாம் **'**மஸீஹ் மவ்வூத்**'** மற்றும் **'**மஹ்தியே மஃஹூத்**'** அவர்களை ஏற்றுக்கொள்ளும் நல்வாய்ப்பை நமக்கு வழங்கியுள்ளான். 23 மார்ச் 1889 அன்று அன்னார் லூதியானாவில் பைஅத் வாங்கி கலப்பற்றவர்களின் ஜமாஅத்தை நிறுவினார்கள். நான் ஓதிய சூரத்துல் ஜுமுஆவின் வசனங்களில் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் உண்மை அடியாரின் வருகை மற்றும் அவர் மூலமாக ஒரு ஜமாஅத் நிறுவப்படும் என்ற நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. இது தவிரவும், பிற வசனங்கள் மற்றும் நபிமொழிகளிலும் இந்த நற்செய்தி உள்ளது.

தற்போது நான் இந்த வசனங்களின் விளக்கம் மற்றும் வரக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலகட்டத்தின் பல்வேறு அடையாளங்களாக எடுத்துரைக்கப்பட்டவற்றின் விளக்கத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் எடுத்துரைப்பேன். அதேபோன்று அன்னாரது வாதம் என்னவாக இருந்தது என்பதையும் சுருக்கமாக அன்னாரது வார்த்தைகளில் எடுத்துரைப்பேன்.

இந்த வசனங்களின் விளக்க உரையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த வசனத்திலிருந்து தெரிய வருவதாவது, இறைவன் எப்படிப்பட்ட இறைவன் என்றால், அறிவு மற்றும் ஞானத்தை விட்டும் மக்கள் அறியாமையில் மூழ்கி விட்டிருந்த நேரத்தில் அவன் தூதரை அனுப்பினான். ஆன்மாவை முழுமை பெற செய்கின்ற, மனித ஆன்மாக்களைத் தனது பரிபூரணத்தின் பக்கம் எட்டச் செய்கின்ற, மதிநுட்பம் மிக்க மார்க்க ஞானங்கள் முற்றிலும் மறைந்து விட்டிருந்த அந்தத் தருணத்தில் இறைவன் தனது உம்மீ (எழுதப்படிக்கத் தெரியாத) ரஸூலை அனுப்பினான். அந்த ரஸூல் அந்த ஆன்மாக்களைத் தூய்மைப்படுத்தினார்கள். மேலும், வேதத்தின் ஞானத்தையும் நுணுக்கத்தையும் அவர்களிடத்தில் நிரப்பினார்கள். அதாவது, அடையாளங்கள் மற்றும் அற்புதங்களால் அவர்களை முழுமையான நம்பிக்கையின் அந்தஸ்தை அடையச் செய்தார்கள்.

பிறகு (அல்லாஹ்) கூறினான்: இறுதி காலகட்டத்தில் தோன்றவிருக்கின்ற மற்றுமொரு கூட்டம் உள்ளது. அவர்களும் ஆரம்பத்தில் இருள் மற்றும் வழிகேட்டில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் சஹாபிகளின் வடிவில் கொண்டு வருவான். எதுவரை என்றால், அவர்களுடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையும் கூட சஹாபாவின் விசுவாசம் மற்றும் நம்பிக்கையைப் போன்று ஆகிவிடும். ஸஹீஹ் ஹதீஸில் உள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸின் போது, ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களுடைய தோளில் கை வைத்தவாறு கூறினார்கள்:

لَوْكَانَ الْاِيْمَانُ مُعَلَّقًا بِالثُّرَيَّا لَنَالَهٗ رَجُلٌ مِنْ فَارِس

அக்கால கட்டத்தை பற்றி கூறினார்கள். திருக்குர்ஆன் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்படும். அக்கால கட்டமே மஸீஹ் மவ்வூதின் காலகட்டமாகும். பாரசீக வம்சத்தைச் சார்ந்த அவரின் பெயரே மஸீஹ் மவ்வூத் ஆகும்.

அன்னார் கூறினார்கள்: இந்த வசனத்தின் பொருள் யாதெனில், முழுவதுமான வழிகேட்டுக்குப் பிறகு ஹிதாயத்தையும் ஞானத்தையும் பெறக்கூடியவர்கள் மற்றும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய அற்புதங்களையும் அருள்களையும் காணக்கூடியவர்கள் இரு கூட்டத்தினரே ஆவர்.

முதலாவது, சஹாபா ஆவர். இரண்டாவது கூட்டத்தினர் சஹாபாவை ஒத்தவர்கள் ஆவர். அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டத்தினர் ஆவர். ஏனென்றால், இந்தக் கூட்டத்தினரும் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்களுடைய அற்புதங்களைக் கண்டவர்கள் ஆவர். இன்றைய நாள்களில் அவ்வாறே நிகழ்ந்துள்ளது. இவ்வாறாக 1300 ஆண்டுகளுக்குப் பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அற்புதங்களின் கதவு திறந்து விட்டது. (ஹதீஸ் நூல்களான) தாரே குத்னீ மற்றும் ஃபதாவா இப்னு ஹஜரில் குறிப்பிடப்பட்டுள்ள நபிமொழிக்கு ஏற்ப சூரிய சந்திர கிரகணங்கள் ரமலானில் வெளிப்பட்டன. இதை மக்கள் தங்கள் கண்களால் கண்டார்கள்.

பிறகு, மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் தோன்ற உள்ளதாக எடுத்துரைக்கப்பட்ட வால் நட்சத்திரம் வெளிப்பட்டதையும் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டார்கள். அவ்வாறே ஜாவாவின் நெருப்பையும் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டார்கள். அவ்வாறே பிளேக் நோய் பரவுதல் மற்றும் ஹஜ் செய்வதிலிருந்து தடுக்கப்படுவதையும் அனைவரும் தங்கள் கண்களால் கண்டார்கள். நாட்டில் ரயில் வண்டி தயாராவது மற்றும் ஒட்டகங்கள் வீணாகி விடுவது ஆகிய இவை அனைத்தும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் அற்புதங்கள் ஆகும். இவை, சஹாபா அற்புதங்களைக் கண்டது போன்றே இக்காலகட்டத்தில் காணப்பட்டன. இதன் காரணத்தினால் தான் வல்லமை படைத்த அல்லாஹ் அந்த இறுதி கூட்டத்தினரை 'மின்ஹும்' என்ற வார்த்தையால், இவர்களும் அற்புதங்களைக் காணும் வகையில் சஹாபாவைப் போன்று உள்ளார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக அழைத்துள்ளான். 1300 ஆண்டுகளில் இவ்வாறான நபித்துவ வழியிலான காலகட்டத்தை வேறு யார் அடைந்திருக்கிறார்கள் என சிந்தித்துப் பாருங்கள்!

நமது ஜமாஅத்திற்குப் பல வகையில் ஸஹாபாவின் ஜமாஅத்துடன் ஒப்புமை இருக்கின்றது. அவர்கள் ஸஹாபிகளைப் போன்று இறைவனுடைய அடையாளங்கள் மற்றும் புத்தம் புதிய உதவிகளால் ஒளியையும் நம்பிக்கையையும் அடைகின்றார்கள். மேலும், அவர்கள் ஸஹாபாவைப் போன்று இறைவழியில் மக்களது ஏச்சுப் பேச்சுக்கள், ஏளனம், வசை மொழிகள் மற்றும் ரத்த உறவை முறித்தல் ஆகிய காயங்களைப் பெறுகின்றார்கள். அவர்கள் ஸஹாபிகளைப் போன்று இறைவனது அடையாளங்கள் மற்றும் விண்ணின் உதவியால் தூய வாழ்வைப் பெற்றுக் கொண்டே செல்கிறார்கள். அவர்களில் பலர் ஸஹாபா அழுததைப் போன்று தொழுகையில் அழுபவர்களாகவும் ஸஜ்தா செய்யும் இடங்களைக் கண்ணீரால் நனைப்பவர்களாகவும் உள்ளனர்.

அவர்களில் பலர் ஸஹாபா பெற்றதைப் போன்று வஹீ மற்றும் இல்ஹாமால் நற்பேறு பெறுகிறார்கள். இந்த ஜமாஅத் ஸஹாபாவுடன் ஒப்புமை கொண்டிருப்பதைப் போன்று இந்த ஜமாஅத்தின் இமாம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் ஒப்புமை கொண்டுள்ளார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியின் பண்பைப் பற்றி எடுத்துரைக்கும் போது, அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஒப்புமை கொண்டிருப்பார்கள் என்று கூறியுள்ளார்கள். இரண்டு ஒப்புமைகள் அவர்களிடம் காணப்படும். ஒன்று, ஹஸ்ரத் (ஈஸா) மஸீஹ் (அலை) அவர்களுடன் ஒப்புமை கொண்டிருக்கின்ற காரணத்தினால் அன்னார்

‘மஸீஹ்’ என்று அழைக்கப்படுவார். இரண்டாவது ஒப்புமை, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் ‘மஹ்தி’ என்று அழைக்கப்படுவார்.

தமது வாதத்தை குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் காலத்தின் இப்போதைய நிலைமையைக் கண்டு, இக்காலத்தைப் பல்வேறு விதமான தீமைகள் மற்றும் பாவங்களில் நிரம்பியிருக்கக் கண்டு, உண்மையை கொண்டு சேர்ப்பதற்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் என்னை அனுப்பினான். மேலும், இந்த காலமும் எவ்வாறானதாக இருந்தது என்றால், மக்கள் 13 ஆம் நூற்றாண்டு ஹிஜ்ரீயைக் கடந்து 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தை அடைந்து விட்டிருந்தார்கள். அப்போது நான் இந்தக் கட்டளையை நிறைவேற்றியவாறு பொதுமக்களிடம், எழுத்து வடிவிலான பிரசுரங்கள் மற்றும் சொற்பொழிவுகள் வாயிலாக, ‘இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வரவிருந்த, மார்க்கத்தைப் புதுப்பிக்கக்கூடிய, பூமியை விட்டும் தொலைந்திருந்த அந்த ஈமானை மீண்டும் நிலை நாட்டுவதற்காக வரவிருந்தவர் நானே ஆவேன்’ என்று குரல் கொடுக்க ஆரம்பித்தேன்.

வரவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தாம்தான் என்பதற்கு என்ன ஆதாரம் என்பதற்கு விளக்கம் அளித்தவாறு அன்னார் கூறுகிறார்கள்: இதற்கான பதில் யாதெனில், எந்த காலகட்டத்தில் எந்த நாட்டில் எந்த கிராமத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வெளிப்படுவார் என்பது பற்றி திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் நிருபணமாகின்றதோ, எந்தக் குறிப்பான செயல்கள் மஸீஹின் வருகையின் நோக்கமாக கூறப்பட்டிருக்கின்றனவோ, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்கான அடையாளங்களாக வானம் மற்றும் பூமியின் எந்த நிகழ்வுகள் பற்றி கூறப்பட்டிருக்கின்றதோ, எந்த ஞானங்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சிறப்பம்சமாக கூறப்பட்டிருக்கின்றதோ அவை அனைத்தையும் அல்லாஹுத்தஆலா என்னிடத்தில், எனது காலகட்டத்தில், என் நாட்டில் ஒன்று சேர்த்திருக்கின்றான்.

ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் பற்றி அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மக்கள் இந்த ஜமாஅத்தை அழிக்க முயற்சி செய்வார்கள். அனைத்து வித சதித்திட்டங்களையும் தீட்டுவார்கள். ஆனால், இறைவன் எப்போதும் இந்த ஜமாஅத்திற்கு உதவி புரிவான் என்று இன்றிலிருந்து 23 ஆண்டுகள் முன்பாக பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த இல்ஹாம் இடம்பெற்றிருக்கின்றது.

இன்றும் இது தொடர்கின்றது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தஆலா பராஹீனே அஹ்மதிய்யாவில், கருத்துச் செறிவு மற்றும் சொற்செறிவின் ஊற்று உம்முடைய உதடுகளில் வழிந்தோடும் என்று கூறியுள்ளான். இந்த அடையாளத்தின் ஆதாரம் ஹுஸூர் (அலை) அவர்களின் நூல்களே ஆகும். பல நூல்கள் கருத்தாழமிக்க அரபி மொழியில் எழுதி ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வெகுமதியாக (நிர்ணயித்து) வெளியிடப்பட்டன. ஆனால், எவரும் போட்டியிட வரவில்லை.

*துஆ ஏற்றுக்கொள்ளப்படுதலின் அடையாளங்கள் பற்றி ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், தெற்கில் உள்ள ஹைதராபாத்தை வசிப்பிடமாகக் கொண்ட அப்துர்ரஹ்மான் என்பவரின் மகன் அப்துல் கரீம் என்ற ஒரு மாணவனின் உதாரணத்தை எடுத்துரைத்தார்கள்.* அவர் காதியானில் கல்வி பயில்வதற்காக வந்திருந்தார். அவரை வெறிநாய் கடித்து விட்டது. எல்லா வகையிலும் சிகிச்சை செய்ய முயற்சி செய்த பிறகு, மருத்துவர்கள் நிராசையை வெளிப்படுத்தினார்கள். அந்நிலையில் அன்னார் இறைவனிடம் மிகவும் உருக்கத்துடன் துஆ செய்தார்கள். மேலும், அந்த சந்தர்ப்பத்தில் துஆ ஏற்றுக்கொள்ளப்படுதலின் குறிப்பிட்ட சூழ்நிலையும் உருவாகிவிட்டது. எனவே, சிறிது நேரத்திலேயே அந்த மாணவனது உடல் ஆரோக்கியம் பெற தொடங்கியது. மேலும், சில நாட்களுக்குள் அவர் முற்றிலும் நலமாகி விட்டார்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறை உதவியின் அடையாளங்களைப் பற்றிய குறிப்பில் டாக்டர் அலெக்ஸாண்டர் டூயீ, (பாக்கிஸ்தானில் உள்ள) கஸூர் எனும் ஊரைச் சேர்ந்த குலாம் தஸ்தகீர் மற்றும் ஜமுவைச் சேர்ந்த சிராக்தீன் ஆகியோரது உதாரணங்களை எடுத்துரைத்தார்கள்.*

**‘**வரவிருந்த மஸீஹ் மற்றும் மஹ்தி வந்துவிட்டார்; ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது உண்மை அடியார் இவர்தான்; மேலும், அவரிடம் பைஅத் செய்வது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப அவசியமானதாகும்**’** என்ற உண்மையை இன்று முஸ்லிம்கள் புரிந்து கொண்டால், முஸ்லிம்கள் உலகில் தங்களது மேன்மையை மீண்டும் நிலைநாட்டி விடுவார்கள். இல்லாவிடில் அவர்களது நிலை தற்போது உள்ளதைப் போன்றே இருக்கும்.

ரமலான் மாதத்தில் அஹ்மதிகள் தமக்காக துஆ செய்கிற அதே வேளையில், ஜமாஅத் எல்லாவித குழப்பங்களில் இருந்தும் தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். அதேபோன்று முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா அவர்களது கண்களைத் திறப்பானாக. அவர்களை இருள்களில் இருந்து வெளியேற்றுவானாக. **கத்மே நுபுவ்வத்தின் அந்தஸ்தை உண்மையான முறையில் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் மஸீஹ் மவ்வூத் மற்றும் மஹ்தியே மஃஹூத் ஆன ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களும் அவர்களின் ஜமாஅத்தினர்களுமே ஆவர் என்ற புரிதல் அவர்களுக்குக் கிடைத்திடட்டுமாக.**

பாகிஸ்தானின் அஹ்மதிகள் குறிப்பாக தங்களது நாட்டுக்காகவும் துஆ செய்ய வேண்டும். மேலும், பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹுத்தஆலா குழப்பவாதிகள், தீமையை விரும்புபவர்கள், சுயநலவாதிகள் மற்றும் சுயநலம் கொண்ட தலைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவானாக. அதேபோன்று புர்கினாஃபாஸோவின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹுத்தஆலா அவர்களை அனைத்துத் தீமைகளில் இருந்தும் பாதுகாப்பானாக. பங்களாதேஷின் அஹ்மதிகளையும் குறிப்பாக துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள். அங்கும் ஒவ்வொரு ஜுமுஆவிலும் ஏதேனும் ஓர் அபாயம் நிலவிக் கொண்டிருக்கின்றது.

அஹ்மதிய்ய உலகிற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் தஆலா அனைத்துத் தீமையிலிருந்தும் ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாத்து வைப்பானாக. ஒவ்வோர் அஹ்மதிக்கும் உறுதியான நிலைப்பாட்டை வழங்குவானாக. ஈமான் மற்றும் நம்பிக்கையில் முன்னேறச் செய்வானாக.

உலகம் அழிவிலிருந்து தப்புவதற்காகவும் துஆ செய்யுங்கள். இன்றைய சூழ்நிலையில் உலகம் நெருப்பின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றது. வெளிப்படையான போர்களை நோக்கியும் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதன் காரணத்தினாலும் அழிவு வரவுள்ளது. ஒழுக்க ரீதியான தீமைகளும் எல்லையைத் தாண்டி விட்டன. இந்த மக்கள் அல்லாஹ்வை எந்த அளவுக்கு விட்டு விடுகிறார்கள் என்றால், அதனால் இவர்கள் அல்லாஹ்வின் கோபத்தைத் தூண்டி விடுபவர்களாக ஆகிவிடக்கூடாது. அதன் காரணத்தினால் அல்லாஹ்வின் தண்டனை அவர்கள் மீது இறங்கி விடாமல் இருக்கட்டும் (என்று துஆ செய்யுங்கள்).

அல்லாஹுத்தஆலா அஹ்மதிகளை அனைத்துத் தீமைகளில் இருந்தும் காப்பானாக. அஹ்மதிகளுக்குத் தங்களது கடமை மற்றும் உரிமையை நிலைநாட்டும் நல்வாய்ப்பை வழங்குவானாக. எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றி தனது பாதுகாப்பு மற்றும் அடைக்கலத்தில் எடுத்துக் கொள்வானாக. (ஆமீன்).

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் (பத்திரிக்கை) தினசரி இதழாக ஆகிவிட்டது என்று அறிவிப்பு செய்தார்கள். அதனைப் படிக்குமாறும் வாங்குமாறும் வலியுறுத்தியவாறு அல் ஃபஸ்லில் கட்டுரை எழுதக்கூடியவர்களுக்காவும் துஆக்களின் வார்த்தைகளை உரித்தாக்கினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**